**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .121/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : மாலதி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of**15.04.2024**

---

**முதல் விசாரணை:**

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா 1 பொன்மலர் எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியவில்லை. கடந்த 2017 ம் ஆண்டு விபத்து நடந்தது. அன்று மதியம் 2.00 மணியளவில் நானும் எனது சகோதரி பொன்மலரும் உசிலம்பட்டி - மதுரை ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்றபோது பின்னால் இருந்து வந்த இருசக்கர வாகனம் ரோட்டில் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த எனது சகோதரி அ.சா.1 ன் மீது மோதி தள்ளிவிட்டது. அதனை தொடர்ந்து எனது முன்னால் பைக்கில் வந்த கணவர் மனைவி இருவரும் கீழே விழுந்தார்கள். எனது தங்கையை நான் தூக்கி பார்த்த போது அவரது பின்தலையில் இரத்தமாக இருந்தது. மேலும் அவருக்கு நெஞ்சில் இரத்தக்கட்டு இருந்தது. பக்கத்தில் நிறைய ஆட்கள் கூடிவிட்டார்கள். ஆட்டோவில் ஒரு நபரின் உதவியுடன் நான் எனது தங்கையை பாலா மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது தங்கை உள்நோளியாக சிகிச்சையில் இருந்தார். மேலும் இருசக்கர வாகனத்திற்கு பின்னால் சம்பவ இடத்தில் PRC அரசு பேருந்தும் நின்றது. எனது தங்கை சம்பவ நடந்த அன்று புகார் அளித்தார். எனது தங்கை பஸ் ஓட்டுநர் மீதும் இருசக்கர வாகன ஓட்டுநர் மீது நடந்த விபரம் சொல்லி புகார் அளித்தார். ஆஜர் எதிரியின் மனைவி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. எனது சகோதரிக்கு முன்பாக இரண்டு அடி தூரத்தில் சென்றேன். நான் மேற்கு திசையை நோக்கி பார்த்து கொண்டு சென்றேன் என்றால் சரிதான். எனது சகோதரி அடித்து விழுந்த பின்பும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் கீழே விழுந்த பின்பும் சத்தம் கேட்டு தான் நான் பார்த்தேன்.என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தி வாகனம் எவ்வாறு வந்தது எப்படி மோதியது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

S.d./Malathi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,Usilampatti.